# பண்டைய தமிழரின் திருமண முறைகள்

முனைவர் பா.ம. ஜெயகலா
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-2
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047

**ABSTRACT**

Marriage is a ritual practiced by our ancestors for a man and a woman to live together. Such marriages have been performed in many ways in the life of the ancient Tamils. He stayed at the woman's house to get married and did the work and married her. When the headman and the daughter-in-law involved in the theft did not consent to the marriage, the headman took the child to marry without anyone's knowledge, which was called consanguineous marriage. The marriage that showed their valor by taming the bull is called ascending. The girl was married off by the head of the family. Our literature tells us that the bridegroom marries the woman of his choice.

**KEYWORDS: Thirumanam, Sevai, Udan Pokku, Eru Tazhuval, Madalerutal, Talaivan, Talaivi, Pettor, Sadangu Muraikal**

**ஆய்வுச்சுருக்கம்**

ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்காக நம் முன்னோர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட சடங்கு முறையே திருமணம் ஆகும். இத்தகைய திருமணம் பண்டைய தமிழர்களின் வாழ்வில் பல முறைகளில் நடத்தப்பட்டு வந்துள்ளன. திருமணம் செய்துக்கொள்ள எண்ணி பெண்ணின் வீட்டில் தங்கி வேலைகளைச் செய்துக் கொடுத்து திருமணம் செய்துள்ளார் இதனை சேவை திருமணம் என்றனர். களவில் ஈடுபட்ட தலைவனும் தலைவியும் திருமணம் செய்ய பெற்றோர் சம்மதம் தெரிவிக்காத நிலையில் தலைவன் யாருக்கும் தெரியாமல் திருமணம் செய்ய அழைத்துச் செல்லுதலை உடன் போக்கு திருமணம் என்று அழைத்தனர். மாட்டினை அடக்கி தங்கள் வீரத்தை வெளிகாட்டி செய்த திருமணத்தை ஏறுதழுவல் என்பர். பெண் வீட்டாருக்கு தலைவன் வீட்டார் பொருள் கொடுத்தும் திருமணம் செய்துள்ளனர். தான் விரும்பிய பெண்ணை திருமணம் செய்ய மணமகன் மடலேறி திருமணம் செய்ததை நம் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

**திறவுச்சொற்கள்**

திருமணம், சேவை, உடன் போக்கு, ஏறு தழுவல், மடலேறுதல், தலைவன், தலைவி, பெற்றோர், சடங்கு முறைகள்.

**முன்னுரை**

பழந்தமிழர்கள் மனித சமுதாயத்தில் ஒழுக்கத்தை நிலை நாட்ட திருமணம் என்னும் சடங்கு முறையை உருவாக்கினர். இத்தகைய திருமணம் மதம், சாதி இவற்றின் அடிப்படையில் சில மாறுதல்களை உள்ளடக்கி காணப்பட்டதை நம் இலக்கியங்கள் வழி அறிய

முடிகின்றது. பண்டைத் தமிழரின் திருமண முறைகளை ஆய்வதே இவ் வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

**திருமணம்**

திருமணம் என்பது ஓர் ஆணும் ஓர் பெண்ணும் இணைந்து வாழ்வதற்காக நம் முன்னோர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு சடங்கு முறையாகும். இதனால் மனித சமுதாயத்தின் ஒழுக்கம் நிலைநாட்டப்படுகின்றது. இத்தகைய திருமணம் மதம், சாதி இவற்றின் அடிப்படையில் சில மாறுதல்களை உள்ளடக்கியது. பழந்தமிழர்கள் வதுவை, மன்றல், மணம் என பல பெயர்களில் அழைத்தனர். இன்று கல்யாணம் என்ற சொல்லை அதிகமாக வழக்கத்தில் பயன்படுத்தி வருகின்றனர். " மனித இனம் தன்பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவுச் செய்து கொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும். உயர் பாலூட்டிகளிடமும் பிற கீழின விலங்குகளிடமும் பாலுறவு ஓர் உயிரியல் செயலாக மட்டுமே நிகழ்கிறது. ஆனால் மனிதர்கள் அடிப்படையில் சமுதாய பண்பாட்டு விலங்காதலால் அவ் உயிரியல் செயலை திருமணம் என்னும் நிறுவனச் செயலாக்கி அவர்கள் தம் உயிரியல் உந்துதல்களை நிறைவு செய்து கொள்கின்றனர். சமுதாயம், பண்பாடு ஆகிய இரண்டும் மனிதன் அவனுடைய வாழ்வியல் தேவைகளை ஈட்டுவதற்காக ஏற்படுத்திக் கொண்ட கருவியே. அதனால் தான் இடம்,காலம், சூழலுக்கு ஏற்ப கருவியை தன் விருப்பம் போல் இயக்கிக் கொள்கிறான். (பக்தவத்சல பாரதி :2016 :ப.379) என பக்தவத்சல பாரதி கூறியுள்ளார். இல்லறத்தைச் செம்மையுற சிறப்பாக நடத்துவதற்கு தலைவன் தலைவியை திருமணம் செய்துக் கொள்வான். தலைவனுக்குக் கொடுப்பதற்குரிய மரபினையுடையோர் தலைவியை திருமணம் செய்துக் கொடுப்பதனை,

"கற்புஎனப் படுவது கரணமொடுபுணர
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

(தொல். பொருள்:140)

இந்நூற்பா சுட்டுகின்றது. பழங்காலத்தில் தலைவன் தலைவியரிடையே பொய் கூறல், தவறு இழைத்தல் என்னும் குற்றங்கள் தோன்றியதால் பெரியோர் திருமணம் என்னும் சடங்கினை வழக்கத்திற்குக் கொண்டு வந்தனர். இதனை,

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப." (தொல். பொருள் :143)

இன்நூற்பா நமக்கு உணர்த்துகின்றது.

பண்டைய காலத்தில் மதம், சாதி, வீரம், பொருளாதாரம் இவற்றின் அடிப்படையில் பெரும்பான்மையான திருமணங்கள் நடைபெற்றுள்ளன. சில திருமணங்கள் இவை எதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனதிற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து நடைபெற்றன.

**நல்ல நாள் பார்த்தல்**

பழந்தமிழர்கள் திருமண நிகழ்வுகளை நல்ல நாளில் நல்ல நேரம் பார்த்து நடத்தினால் நன்மை பயக்கும் என நம்பிக்கை கொண்டிருந்தனர். "இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பழந்தமிழர் இயற்கைக் கூறுகளின் செயல்பாடு கொண்டே தங்களது செயல்களை ஆற்ற தொடங்கினர். அந்நிலையில் வேங்கை மலரும், இளவேனிற் காலத்தையே திருமணத்திற்கு உரிய காலமாக பண்டைய தமிழர் கருதியிருந்தனர் என்பது தெரிய வருகிறது. அத்துடன் சிறப்புக் கருதி நன்னாள் வேங்கை கனிவாய் வேங்கை, எனப் பண்டை தமிழ்ப் புலவர்கள் சுட்டி யுரைத்திருப்பது கொண்டு பழந்தமிழரின் இயக்கத்திற்கு இயற்கையே பெரும் காரணியாக இருந்துள்ளமைப் புலப்படும். “(க. காந்தி : 1989 : பக : 38,39) திருமணம் நடத்த நல்ல நாளாக மதி உரோகிணியைகா கூடிய நாளை கருத்தியதை,

"உழுந்து தலைப் பெய்த கொழுங் களி மிதவை
பெருஞ் சோற்று அமலை நிற்ப நிரைகால்
தண் பெரும் பந்தர்த் தருமணல் ஞெமரி
மனை விளக்குறுத்து, மாலை தொடரி,
கனை இருள் அகன்ற கவின்பெறு காலை
கோள் கால் நீங்கிய கொடு வெண் திங்கள்
கேடு இல் விழுப் புகழ் நாள் தலைவந்தென. "( அகம் 86:1- 7 )

இவ்வரிகள் புலப்படுத்துகின்றன. தற்போதும் பெரும்பாலோர் நல்ல நாள் நட்சத்திரம் பார்த்து நாள் குறித்து திருமணம் நடந்து வழக்கம் மரபாக பின்பற்றப் பட்டு வருகின்றது.

**சேவைத் திருமணம்**

தனக்கு பிடித்த பெண்ணை திருமணம் செய்ய விரும்பும் ஆண் அப்பெண்ணின் வீட்டில் தங்கியிருந்து அவர்களின் தொழில்களையும் வேலைகளையும் செய்து அப்பெண்ணை திருமணம் செய்துக் கொள்ளும் வழக்கமும் அக்காலத்தில் இருந்துள்ளது. இதனை,

“நலம்சால் விழுப்பொருள் கலம் நிறை கொடுப்பினும்
பெறல்அருங் குறையள் ஆயின், அறம் தெரிந்து,
நாம் உறை தேஎம் மரூஉப்பெயர்ந்து அவனொடு

இருநீர்ச் சேர்ப்பின் உட்புடன் உழந்தும்
பெருகுநீர்க் குட்டம் புணையெடு  புக்கும்
படுத்தனம், பணிந்தனம் அடுத்தனம் இருப்பின்,
தருகுவன் கொல்லோ தானே- வரிதிரைக்
கண்திரள் முத்தம் கொண்டு ஞாங்கர்த்
தேன்இயிர் அகன்கரைப் பகுக்கும்
கானல்அம் பெருந்துறைப் பரதவன் எமக்கே." ( அகம் 280: 5 - 14 ).

என்னும் பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன.

**உடன்போக்குத் திருமணம்**

காதல் கொண்ட தலைவனையும் தலைவியையும் திருமணம் செய்து வாழ பெற்றோர்கள் சம்மதம் தெரிவிக்காத காரணத்தால் தலைவன் தலைவியை யாருக்கும் தெரியாமல் திருமணம் செய்ய அழைத்துச் செல்லுதலை உடன் போக்கு என்பர். இதனை தொல்காப்பியர், 'கொண்டுதலைக் கழித்தல்' என்பார். தலைவன் தலைவியர் உடன் போக்கை மேற்கொள்ளுவர். அந்நிலையில் கொடுத்தற்குரிய தலைவியின் உறவினர் இல்லாத இடத்தும் சடங்குடன் கூடிய திருமணம் ஊரறிய நடைப்பெற்றதை,

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துஉடன் போகிய காலை யான" (தொல். பொருள் : 141)

இந்நூற்பா வழி தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார். இத்தகைய உடன்போக்கானது எட்டு வகைகளில் நடைப்பெற்றதை,

"போக்குஅறி வுறுத்தல் போக்குஉடன் படாமை
போக்குஉடன் படுத்தல் போக்குஉடன் படுதல்
போக்கல் விலக்கல் புகழ்தல் தேற்றல் என்று
யாப்புஅமை உடன் போக்கு இரு நான்கு வகைத்தே (நம்பி:181)

நம்பியகப் பொருள்  பாலடிகள் நமக்கு விளக்குகின்றது.

தலைவியின் களவினை அறிந்த தாய் உடன் போக்கினைத் தவிர்ப்பதற்காக அவளை இற்செறித்ததை,

"அழுங்கல் ஊரோ அறன் இன்று அதனால்
அறன்இல் அன்னை அருங் கடிப்படுப்ப
பசலை ஆகி விளிவது கொல்லோ" (நற்றி 63 :5 - 7 )

மேலும்,

"ஆயமும் அழுங்கின்று யாயும் அஃது அறிந்தனள்
அருங்கடி அயர்ந்தனள், காப்பே" (நற்றி295:2-3)

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. தலைவியின் காதலை தாய் அறிந்ததால் அவளை பாதுகாப்பதனை,

"கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடு தரு நிதியினும் செறிய
அருங் கடிப் படுக்குவள் அறன் இல் யாயே" (அகம்60:13-15)

இவ்வடிகள் பகர்கின்றன.

**ஏறுதழுவல் திருமணம்**

ஏறுதழுவல் என்பது தமிழர்களின் மனமார்ந்த விளையாட்டுகளில் ஒன்றாகும். இது மாட்டினை அடக்குவது அல்லது வீழ்த்துவதாகும். இவ் விளையாட்டு ஆயர் சமுதாயத்தில் நிலவிய மணவினைச் சடங்கு முறைகளில் ஒன்றாகும். இதனை 'ஏறுகோள்' எனவும் அழைப்பர். இன்றைய காலகட்டத்தில் வழக்கத்தில் உள்ள ஜல்லிக்கட்டு என்றழைக்கப்படும் மஞ்சுவிரட்டு என்பதனோடு ஒப்பிடலாம். ஏறுதழுவியதை கலித்தொகை,

"நளிவாய் மருப்பஞ்சு நெஞ்சினார் தோய்தற்
கெளியவோ வாயமக டோள்
விலைவேண்டா ரெம்மினத் தாயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டிடைத் தாம்வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின்" (கலி103:69-73)

ஏறுதழுவி மணம் செய்ததை,

"ஓஒ இவள், பொருபுக னல்லேறு கொள்பவ ரல்லாற்
றிருமாமெய் தீண்டல ரென்று கருமமா
வெல்லாருங் கேட்ப வறைந்தறைந் தெப்பொழுதுஞ்
சொல்லாற் றரப்பட் டவள்" (கலி102:9-12)

இவ்வரிகள் வழி அறிய முடிகின்றது.

**பொருள் கொடுத்து திருமணம் செய்தல்**

பெண் வீட்டாருக்கு மணமகன் வீட்டார் பொருள் கொடுத்து திருமணம் செய்த நிலை பழங்காலத்தில் வழக்கத்தில் இருந்துள்ளது. இன்று போல் பெண்ணையும் பொருளையும் மணமகனுக்குக் கொடுக்கும் வழக்கமும் அன்றைய பழந்தமிழ் மக்களிடையே

இருந்துள்ளதை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. கோசர் இனப் பெண்ணுக்குப் புதிய அணிகளை விலையாக கொடுத்தாலும் இவள் பெற்றோர் அது போதும் என கொள்வார் அல்லர் என்பதனை,

“இரும்பு இடம் படுத்த வடுவுடை முகந்தர்
கருங் கட் கோசர் நியமம் ஆயினும்
உறும் எனக் கொள்ளுநர் அல்லர்
நறு நுதல் அரிவை பரிசிழை விலையே” (அகம் 90: 11-14)

இவ்வரிகள் வழி அறியலாம். கடல் துறைவன் தலைவிக்கு முலைவிலைப் பொருளாக நாட்டினை வழங்கியதை,

“எக்கர் ஞாழம் மலரின் மகளிர்
ஒள்தழை அயரும் துறைவன்
தண்தழை விலையென நல்கினன் நாடே" (ஐங்:147)

என்ற பாடலடிகள் நமக்கு உறுதியளிக்கின்றன.

**மடலேறி திருமணம்**

பழங்காலத்தில் தான் விரும்பிய பெண்ணை திருமணம் செய்வதற்காக தலைவன் மடலேறுதல் வழக்கத்தில் இருந்துள்ளது. தலைவன் தான் காதல் செய்த பெண்ணை திருமணம் செய்வதற்கு தடை ஏற்பட்ட போது ஊரார் அறியும் பொருட்டு தன்மேனியில் சாம்பலை பூசிக்கொண்டு யாரும் சூடாத எருக்க மலர்களைச் சூடிக்கொண்டு பனங்கருக்கால் செய்த குதிரை உருவின் மீது அமர்ந்து கருக்குகள் உடலை அறுக்கும் வண்ணம் ஊர்வலமாக வருவது மடலேறுதல் என்பர். இத்தகைய திருமண முறையை நமது பழங்கால இலக்கியங்கள் எடுத்துரைத்துள்ளன. இதனை, தொல்காப்பியம்,

“ஏறியமடல் திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே" (தொல். பொருள்:54)

இந்நூற்பா வழி எடுத்துரைக்கின்றது. நல்ல பனை மடலால் உணவுண்ணாத ஒரு குதிரையைச் செய்து அதற்கு சிறு சிறு மணிகளைப் பூட்டியும் பெரிய கச்சையினை

அணிவித்தும் அதன் மேல் எருக்கும் பூமாலைச் சூடியவன் அமர்ந்திருக்க சிறிய பிள்ளைகள் தெருவின்கண் இழுத்தவாறு சென்றதை,

"சிறுமணி தொடர்ந்து பெருங் கச்சு நிறீஇ
குறு முகிழ் எருக்கங் கண்ணி சூடி
உண்ணா நல் மாப் பண்ணி, எம்முடன்
மறுகுடன் திரிதரும் சிறு குறுமாக்கள்" (நற்220:1-4)

இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன. பனங்கருக்கினால் செய்யப்பட்ட ஊர் மக்களின் ஆரவாரத்திற்கு உரிய குதிரையின் கழுத்தில் மணியினை கட்டி மணிகள் ஒலிக்கும் படி மடலேறியதை,

"பொன்நேர் ஆவிரை புதுமலர் மிடைந்த
பல் நூல் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க ஏறி, நாண் அட்டு,
பழிபடர் உள்நோய் வழிவழி சிறப்ப
இன்னள் செய்தது இது என, முன்நின்று
அவள் பழி நுவலும், இவ்வூர்
ஆங்கு உணர்ந்தமையின், ஈங்கு ஏகுமார் உளேனே." (குறுந்:173)

இப்பாடல் அடிகள் பகர்கின்றன. மடலேறி தலைவனுக்கு தலைவியை மணம் முடித்துக் கொடுத்ததை,

"வருந்தமா ஆர்ந்து மறுகின்கட் பாடத்
திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே
பொருந்தாதார் போர்வல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்" (கலித்141:22-25)

இவ்வரிகள் பகர்கின்றன.

**முடிவுரை**

பண்டைய தமிழர்கள் திருமணம் என்னும் ஓர் ஒழுங்கை சமுதாயத்தில் நடைமுறைப்படுத்தி கடைப்பிடித்து உள்ளனர். இதனால் ஒழுக்கம் நிலைநாட்டப்பட்டது நெறிமுறைகள் வகுக்கப்பட்டன. சேவை திருமணம்,உடன்போக்கு திருமணம், பொருள் கொடுத்து திருமணம் செய்தல், ஏறு தழுவல் திருமணம், மடலேறி திருமணம் செய்தல் எனப் பல வகையான திருமண முறைகளைப் பின்பற்றியதை இலக்கியங்கள் நமக்கு பறைசாற்றுகின்றன.

**துணைநூற்பட்டியல்**

1. காந்தி,க. தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், 1980, உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை.
2. செயபால், இரா. முனைவர்., சங்க இலக்கியம் அகநானூறு ( தொகுதி 1&2), 2014, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை.
3. திருஞானசம்பந்தம், ச. முனைவர்., அகப் பொருள் விளக்கம், 2010, கதிர் பதிப்பகம், திருவையாறு.
4. திருஞானசம்பந்தம்,ச. பேராசிரியர், தொல்காப்பியம் பொருளதிகாரம், 2018, கதிர் பதிப்பகம், திருவையாறு.
5. நாகராஜன், வி.முனைவர், குறுந்தொகை, 2014, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட் அம்பத்தூர், சென்னை.
6. நாராயண வேலுப்பிள்ளை, வித்துவான். ஐங்குறுநூறு, 1994, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை.
7. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல், 2016, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
8. பாலசுப்பிரமணியன்,கு. வெ. முனைவர்., நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட் அம்பத்தூர், சென்னை.
9. முனீஸ் மூர்த்தி, மு. முனைவர்., சங்க இலக்கிய உரை வேறுபாட்டுக் களஞ்சியம் கலித்தொகை, 2024, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்( பி)லிட்,அம்பத்தூர், சென்னை.